தமிழ்நாடு அரசு

# நெடுஞ்சாலைத்துறை

## திருப்பூர் கட்டுமானம் (ம) பராமரிப்பு வட்டம்

**ந.க.எண். 491 / 2019 / ஆ3 / நாள் 15.10.2025.**

## விளம்பரம் வேலைவாய்ப்பு அறிவிக்கை

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை திருப்பூர் (நெ) க(ம)ப வட்டத்தில் காலியாக உள்ள1 ஆதிதிராவிடருக்கான ஓட்டுநர் குறைவு பணியிடம் திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டத்தினை இருப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மட்டும் நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் 19.11.2025-க்குள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | காலிப் பணியிடங்கள் | ஒதுக்கீடு விபரம் | தகுதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 1- ஆதிதிராவிடர் (முன்னுரிமை பெறாதவர்/ முன்னுரிமை பெற்றவர்) | 1 | வயது 01.07.2025 அன்று | SC- | 18-37 |
| | | | 2 | கல்வித் தகுதி | 8-ம் வகுப்பு தேர்ச்சி | |
| | | | 3 | ஊதிய விகிதம் | ரூ.19500-71900 ( நிலை 8) | |

<u>நிபந்தனைகள்</u>

1. கனரக வாகனம் / இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் சான்று (வில்லை) பெற்றிருக்க வேண்டும்.கனரக/இலகுரக வாகன ஓட்டுநர் பதவிக்கு 2 ஆண்டுகள் கனரக / இலகுரக வாகனங்களை இயக்கிய அனுபவச் சான்று.
2. 01.07.2025 அன்று 18-37 வயதுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்
3. விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி, சாதி, இருப்பிட முகவரி, முன்னுரிமைச்சான்று மற்றும் பணி அனுபவம் போன்ற சுய விபரங்களைக் குறிப்பிட்டும் இருப்பிடச் சான்றிதழ் மற்றும் 2 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றுகளுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணப்பங்களோ / படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை. உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமாகவோ 19.11.2025 பி.ப. 5.45 மணிக்குள் கிடைக்கப்பெற வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்து தனியே கடிதம் மூலமாக **(Call Letter)** தகவல் தெரிவிக்கப்படும்.
6. பணியிடங்களுக்கான தகுதியான நபர்கள் நேர்முகத்தேர்வு மதிப்பெண்அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
7. நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு பயணப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.
8. விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பில் அசல் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
9. சான்றிதழ் சரிபார்ப்பில் திருப்திகரமான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
10. தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு வழங்கப்படும் பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது. இப்பணி நியமனத்தினை எந்த நேரத்திலும் ரத்து செய்யும் அதிகாரம் கண்காணிப்புப் பொறியாளருக்கு உண்டு.
11. காலிப்பணியிடங்கள் உரிய அரசு விதிமுறைகளின்படி ஒளிவு மறைவின்றி நிரப்பப்படும் என்பதால் இடைத்தரகர்களிடம் நம்பி ஏமாற வேண்டாம் என தெரிவிக்கப்படுகிறது.

**ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி**

**கண்காணிப்புப் பொறியாளர்**
**நெடுஞ்சாலைத்துறை,கட்டுமானம் மற்றம் பராமரிப்பு,**
**சிக்கண்ணா கல்லூரி சாலை,கள்ளம்பாளையம், திருப்பூர் - 641 602**

**கண்காணிப்புப்பொறியாளர்**
**(நெ),க(ம)ப வட்டம், திருப்பூர்.**

**செ.ம.தொ.இ /1219/ வரைகலை / 2025**